# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

பெற்றோருக்குப் பிள்ளைகள் கடன்பட்டிருக்கும் விதத்தை விரிவாக விளக்குகிறார் விஷ்ணு. மகனைப் புத்திரன் என்று சொல்வது வழக்கமாய் இருக்கிறது என்று நாம் அறிவோம். அந்த புத்திரன் என்ற சொல்லை ஆய்வு செய்யச் சொல்லுகிறார் ஹரி. 'புத்' என்ற, நரகத்திலிருந்து அன்னை தந்தையரைக் காப்பதனால் 'புத்திரன்' என்ற சொல் உண்டாயிற்று என்று இலக்கண விளக்கம் தருகிறார் இலக்குமிநாதன். சொற்களை ஆய்ந்து கற்கத் தொடங்கினாலே நாம் பல உண்மைகளைப் புரிந்து கொள்வோம்.

புத் நாம நரகாத் த்ராயதே இதி புத்ர: என்பது ஆன்றோர் வாக்கு. புத் என்ற நரகிலிருந்து காப்பவன் புத்திரன் என்பது இதன் பொருள். வயிற்றில் தாங்கி, மடியில் தாங்கி, கைகளில் ஏந்தி, முதுகில் சுமந்து, வளர்ப்புச் செலவினைத் தாங்கி, பல பொறுப்புக்களைச் சுமந்து, பெற்றோர்கள் பிள்ளைகளை உருவாக்கி விடுகிறார்கள். இந்தக் கடனை, அடைத்துத் தீர்க்க முடியாது; இது அடையாக் கடன். குறைந்தபட்சம் அவர்கள் இறந்தபிறகு அவர்கள் ஆத்மசாந்திக்குச் செய்ய வேண்டியதையாவது ஒரு மகன் செய்யலாம் அல்லவா? அதனால்தான் இந்தக் கொள்கைக்கு இந்த இடத்தில் பெருமான் அழுத்தம் கொடுக்கிறார். எவனொருவன் பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் தன்பெண்டு பிள்ளைகளின் சொற்படி நடந்து அவர்களைப் புறக்கணிக்கிறானோ அவன் எந்தக் குலத்தில் பிறந்திருந்தாலும் மிக மட்டமான ஜாதியில் பிறந்தவனாக அவனை நினைக்கிறேன் என்கிறார் பகவான்.

கிணறு, நதி இவற்றில் விழுந்து இறந்தவன், வாளால் வெட்டப்பட்டு இறந்தவன், தற்கொலை செய்து கொண்டவன் ஆகியோருக்கு ஓராண்டு காலம் வரையில் எந்தவித கர்மாவும் செய்யலாகாது என்றும், அந்த ஓராண்டுக்குள் குடும்பத்தில் திருமணம், தீர்த்தயாத்திரை முதலிய நற்கருமங்களும் செய்யலாகாது என்றும் கருடனிடம் வற்புறுத்துகிறார் கருணாமூர்த்தியான காகுத்தர். இது கருணையாகுமா? என்றும் அந்த ஓராண்டு வரை இறந்த ஆத்மாக்களின் கதி என்ன என்றும் நீங்கள் வினவலாம். அப்படி இறந்தவர்கள் சார்பில் மற்றவர்கள் மனத்திற்குள் பகவானை கெஞ்சி அருள் வேண்டலாம். அதற்குத் தடையில்லை. ஸ்ரீவைஷ்ணவத்தின் சிறப்பே அதுதான்! வெறும் சரணாகதிக்கு எந்த நியமனமும் இல்லை என்கிறார்கள் கருணாமூர்த்திகளான நம் ஆசாரியர்கள். ஓராண்டு முடிந்தபிறகு கர்மம் செய்து அதன் பிறகு யாவும் செய்யலாம் என்று அனுமதிக்கிறார் நம் அனுக்ரஹ மூர்த்திப் பெருமாள்.

பிரேத ஜென்மத்தால் மற்றவர்கள் அடையும் இம்சைகளை விளக்கமாகப் பெருமாள் கூறக் கேட்ட கருடாழ்வார், யார் யார் இப்படி பிரேத ஜென்மத்தை அடைகிறார்கள்? என்று ஒரு கேள்வி எழுப்புகிறார். அந்தக் கேள்வியை பட்டியல் தரும் விசை என்று கூட நாம் சொல்லலாம். ஏனென்றால் இதற்கு பதில் சொல்லும் பார்த்தசாரதி அடுத்தப் பட்டியலை நமக்கு வரிசைப் படுத்தித் தருகிறார். அந்தப்

பட்டியலைப் படித்தால் நம் பெயர் அவ்வரிசையில் இடம் பெறக் கூடாது என்ற பதைப்பு நிச்சயம் நமக்கு உண்டாகும். நமக்கு அநாவசியமான தண்டனைகள் வந்து சேரக் கூடாது என்ற அன்பினாலும் அக்கறையினாலும் தானே அந்த அனாதரட்சகன் இப்படி அறநூல்களை நமக்கு அள்ளி வழங்குகிறான்? அதனால் இதைப் பொறுமையாகப் படித்து நம்மை நாம் தற்காத்துக் கொள்வோம்.

பெரும்பாவம் செய்தவன்தான் பிரேத ஜென்மம் அடைகிறான் என்ற முன்னுரையோடு தொடங்கி அந்த முகுந்தன் முதல் பாவமாகச் சொல்லுவது, முன்னோர் செய்த சில நற்காரியங்களை விற்பனைப் பொருளாக்குவது – அதாவது ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்துக்கு நடந்து போகும் நீண்ட பாதைகளில் பயணிகள் களைப்பு நீங்க வேண்டும் என்று ஒருவன் கிணறு, தடாகம், குளம், தண்ணீர் பந்தல், சத்திரம், கோவில் முதலியவற்றை ஏற்படுத்தி வைத்திருந்தால் அவன் குலத்தில் பிறந்த அவன் மகனோ, பேரனோ, கொள்ளுப் பேரனோ, இது "என் பரம்பரைச் சொத்து" என்று சொல்லிக் கொண்டு அதற்கொரு விலை வைத்து அதை விற்பனைப் பொருளாக்கிப் பணம் சம்பாதித்தால் பகவான் படுகோபம் அடைகிறான. அது மட்டுமல்ல, ஒரே மனிதன் ஒரு காலத்தில் மேற் சொன்ன அமைப்புகளைக் கருணையினால் ஏற்படுத்தி பிறகு அவனே பின்னால் வரும் நாள்களில் இது "நான் கட்டியது தானே" என்ற உரிமையில் விற்றுப் பணமாக்கினால் இறைவன் எரிச்சலடைகிறான். இவர்கள் பிரேத ஜென்மம் அடைகிறார்கள் என்கிறார் பெருமாள். கருணையைக் காசாக்கக் கூடாது என்பது கடவுளின் நோக்கம்.

அடுத்த குற்றவாளி யார் என்றால் பிறருக்கு உரிமையான பூமியை அபகரிப்பவன். இவனோடு இன்னும் சிலரையும் குற்றவாளி வரிசையில் சேர்க்கிறார். நம் குடில குந்தளன். கிராம எல்லைகளையும், வயல் வரப்பு எல்லைகளையும், பூங்காவின் எல்லைகளையும், காட்டு எல்லைகளையும், புரட்டி தன் நிலத்தோடு சேர்த்துக் கொண்டு பொய்ப் பத்திரம் எழுதுகிறவர்கள், பொதுக் குளத்தையோ, கிணற்றையோ தூர்த்து தன்னிலம் ஆக்கிக் கொள்ளுகிறவர்கள்– இவர்களும் பிரேத ஜென்மத்தை அடைகிறார்கள் என்கிறார். கேட்பாரற்றுக் கிடக்கும் நிலம் தானே!, என்று ஆக்கிரமிப்புச் செய்கிறவர்கள் இதையெல்லாம் சிந்திப்பார்களா?

'அபம்ருத்யு' என்று ஒரு வடசொல் உண்டு. இதை நாம் புரிந்து கொள்ளும்படிச் சொல்ல வேண்டுமானால் துர்மரணம் அல்லது அவலச் சாவு என்று சொல்லலாம். இப்படிச் சாவு பாவத்தின் விளைவால் நிகழ்வது. இதன் விளைவும் பிரேத ஜென்மம் தான். மிருகங்களால் கடிக்கப்பட்டு இறந்தவன், இடிவிழுந்து செத்தவன், நெருப்பில் குதித்து உயிர் நீத்தவன், மாடுமுட்டி மாண்டவன், விஷம், தூக்கு, தீ, முதலியவற்றால் தற்கொலை செய்து கொண்டவன், குலத்தால், குணத்தால், மஹா தீயவனாக இருக்கிறவனால் கொல்லப்பட்டவன் – இவர்களுக்கும் பிரேத ஜென்மம் தான் என்கிறார் பெருமாள்.

நல்ல சாவு ஏற்படுவதற்கும் ஒரு கொடுப்பினை வேண்டும். அது தானே வராது. நாம் வாழும் வாழ்க்கை முறையினால் தான் நமக்கு நல்ல சாவோ கெட்ட சாவோ ஏற்படுகிறது. அதை நிர்ணயிப்பவர் பெருமாள். அவர் உள்ள உகப்புக்கு ஏற்ப வாழ்ந்து நற்கருமங்களைச் செய்து நாளைக் கழித்து நமக்கு நல்ல முடிவு ஏற்பட வேண்டுமென்று நாரணனை நாளும் தொழுதால் அவன் நம்மைக் கைவிட மாட்டான். இரணியன், இராவணன், சிசுபாலன் போன்ற கெட்டவர்களுக்கும், தன் கையில் மரணம் ஏற்பட்டது என்பதற்காக நற்கதி கொடுத்த நல்லவனல்லவா அவன்? அவனை நம்பினார் கெடுவதில்லை! இதன் தொடர்ச்சியை அடுத்த கட்டுரையில் பார்ப்போம். (தொடரும்)